Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 27-2-1985 புதன்கிழமை (மாசி 16 – ஜ. ஆகிர் 6) முழக்கம் 23

## யாழ். பத்திரிகையாளர் இருவர் ராணுவத்தால் கைதாகி விடுதலை!

யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத் தெருவிலுள்ள "சட்டர்டே றிவியூ" பத்திரிகை அலுவலகத்தைச் சுற்றி வளைத்து, உள்ளேயிருந்த அதன் ஆசிரியர் காமினி நவரத்தினவையும், உதவி ஆசிரியர் உ. சேரனையும் நேற்று பிற்பகல் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்ற இராணுவத்தினர், இருவரையும் தனித்தனியாக வைத்து விசாரணை செய்த பின்னர் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்தனர். இவர்கள் கைதான போது அங்கிருந்த பொறியியலாளர் ஒருவர் முன்னரே விடுதலை செய்யப்பட்டார் சில வெளிநாட்டுச் செய்திகள் —4 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு அனுப்பும் 'விளக்கச்' செய்தியுடன் தூதுவர் திலகரத்தின புதுடில்லி பயணமாவார்

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் தாம் நிகழ்த்திய உரையின்போது இலங்கைத் தமிழ் தீவிரவாதிகள் பற்றியும், அவர்கள் இந்தியாவில் தங்கியிருப்பது பற்றியும் தெரிவித்தது தொடர்பான சில விளக்கக் குறிப்புகள் அடங்கிய செய்தியொன்றை ஜனாதிபதி ஜெயவர்த்தன, இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு உடனடியாக அனுப்பி வைக்கவிருப்பதாக உயர் அரசியல் வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் திரு. பெர்னுட் திலகரத்தின இந்தச் 'செய்தி'யுடன் அடுத்த வாரத்துக்கு முன்னர் புதுடில்லி செல்வார் எனவும் தெரிய வந்துள்ளது.

தமிழ்த்தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் பயிற்சியும், பாதுகாப்பும் கிடைப்பதாக ஜனாதிபதி தமதுபேச்சில் குறிப்பிட்டதை அடுத்தே, கடலோர கூட்டு ரோந்து ஆலோசனையை பாரதம் நிராகரித்திருக்கலாமென்று கொழும்பு வட்டாரங்கள் கருதுகின்றன. இதனால் இதுசம்பந்தமான விளக்கம் இன்றைய நிலையில் அவசியமானதாக கொழும்பு அதிகாரிகள் கருதுகின்றனர், —4ம் பக்கம் பார்க்க

# மன்னார் தலைமன்னாரைச் சேர்ந்த 140 பேர் கடலில் வைத்து கைது!

## சட்டவிரோதமாக தமிழகம் செல்கையில் பிடிபட்டனராம்; 2 படகுகள் பாதுகாப்பில்

மன்னார், தலைமன்னார் பகுதிகளிலிருந்து நேற்று முன்தினமிரவு சட்டவிரோதமாக இந்தியாவுக்குச் சென்று கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட நூற்று நாற்பது பேர் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் இரண்டு இயந்திரவள்ளங்கள் கடற்படையினரின் பாதுகாப்பில் இப்போது வைக்கப்பட்டுள்ளன. 140 பேரையும் இந்தியாவுக்கு ஏற்றிச் செல்வதற்குப் 'பின்னணி'யில் இருந்தவர்களாகக் கூறப்படும் சிலர் கைதாகியிருப்பதாக ராய்ட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடலில் வைத்துப் பிடிக்கப்பட்ட அனைவரும் பாதுகாப்பாக வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராமேஸ்வரத்துக்கு அகதிகளாக அடைக்கலம் பெறுவதற்குச் சென்ற போதே இவர்கள் கைதானதாக விசாரணை —4ம் பக்கம் பார்க்க

## மாநகர சபை ஆணையாளர் மீது விசாரணை

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான ட்ராக்டர் ஒன்றும், ஏழு தார் பீப்பாக்களும் கடத்தப்பட்டது தொடர்பாக யாழ். மாநகர ஆணையாளர் திரு சி வீ. கே. சிவஞானம் நேற்று பாதுகாப்பு அதிகாரிகளால் சுமார் நான்கு மணி நேரம் விசாரணை செய்யப்பட்டார். விபரமான வாக்குமூலமும் இவரிடம் பெறப்பட்டது.

## உத்தரவை மீறினார்களாம்; ராணுவம் சுட்டு நால்வர் பலி

காங்கேசன்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றின்போது நான்கு இளைஞர்கள் மரணமடைந்தனர்.

ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த வேளையில் ராணுவ உத்தரவையும் மீறி மினிபஸ் ஒன்று சென்றதையடுத்து அதன்மீது ராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய நேரிட்டதாகவும், இதனால் —4-ம் பக்கம் பார்க்க

## வளாகத்தில் கொள்ளை

(மட்டக்களப்பு)

வந்தாறுமூலை மட்டக்களப்பு பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முன்தினமிரவு இரசாயன உபகரணங்கள் இனந்தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

## பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

## பரீட்சையைக் குழப்பினால் திரும்பவும் நடைபெறாது!

டிசம்பர் மாதத்தில் குழப்பப்பட்ட மாணவர்களுக்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படும் ஜி. சி. ஈ. விசேஷ பரீட்சை இன்று ஆரம்பமாகி மார்ச் 8ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பரீட்சை ஒழுங்காக நடைபெற அனைவரையும் ஒத்துழைக்குமாறும், மீண்டும் குழப்பப்பட்டால் இன்னொரு தடவை இப்பரீட்சை நடத்தப்படமாட்டாதெனவும் பரீட்சை ஆணையாளர் திரு பீ. காரியவாசம் அறிவித்துள்ளார். 243 நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறும். —4ம் பக்கம் பார்க்க

## சித்தன்கேணியில் நேற்று இருவருக்கு மரண தண்டனை

(வட்டுக்கோட்டை)

இயக்கத்தின் பெயரைக் கூறி நிதி சேகரித்தது, வாகனங்களைக் கடத்தியது ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் சித்தன்கேணிச் சந்தியில் நேற்றுக் காலை இரண்டு இளைஞர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வேலணையைச் சேர்ந்த சி. வாமதேவன், கந்தர்மடத்தைச் சேர்ந்த ந. விக்கினேந்திரன் ஆகிய இருவருமே மின்கம்பத்துடன் கட்டப்பட்டு மரண தண்டனையைப் பெற்றவர்கள்.

தண்டனையை வழங்கியவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சுவரொட்டிகள் சம்பவ இடத்திற்கு அருகாமையில் காணப்பட்டன. எதிரெதிரான கம்பங்களில் இந சடலங்களும் கட்டப்பட்டிருந்தன.

## மட்டுநகர் தேடுதலின்போது பெண் உட்பட 18 பேர் கைது

(மட்டுநகர்)

மட்டுநகரில் நேற்று முன்தினம் பரவலாக நடைபெற்ற தேடுதலின்போது ஆரையம்பதி கிராமம் சுற்றி வளைக்கப்பட்டதனால் பதினெட்டுப் பேர் கைது செய்யப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இவர்களில் இளம்பெண்ணும் ஒருவராவார். கைதானவர்களிடமிருந்து "வோக்கி டோக்கி" உட்பட வெடிமருந்துகள், ரவைகள் ஆகியனவும் மீட்கப்பட்டனவாம். பாதுகாப்பு அதிகாரிகளின் மற்றொரு தேடுதல் சம்பவத்தின் போது இருவர் காயமடைந்ததாகவும தெரியவந்துள்ளது.

## பஸ் நிலையத்தில் 230 கலன் டீசலுடன் பவுஸர் கடத்தல்

யாழ். பஸ் நிலையத்தில் டீசல் நிரப்பிக் கொண்டிருந்த பவுஸர் ஒன்று நேற்று மாலை நான்கு மணியளவில் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டது இந்த பவுஸரில் 230 கலன் டீசல் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் மேலும் இரண்டு பவுஸர் டீசல் இதற்கு முன்னர் பஸ் நிலைய எண்ணெய்க் குதத்தில் நிரப்பப்பட்டது.

இன்று ஜீ சி. ஈ. பரீட்சை தொடங்குவதால் மாணவர் —4-ம் பக்கம் பார்க்க

## மூன்று ஊழியர்கள் விடுதலையாகும் வரை

# யாழ் குடா வங்கிகளின் ஊழியர்கள் வேலை செய்வதில்லையென்று முடிவு!

கடந்த சனிக்கிழமை குருநகரில நடைபெற்ற வங்கிக் கொள்ளை தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டுவிசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கும் மூன்று இலங்கை வங்கி ஊழியர்களையும் விடுதலை செய்யும் வரை வங்கிகளில் வேலை செய்வதில்லையென யாழ்ப்பாணக் குடாநாட்டு வங்கி ஊழியர்கள் ஏகமனதாக முடிவெடுத்துள்ளனர்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹட்டன்நாஷனல் வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் நேற்றக்காலை கூடி இம்முடிவை எடுத்ததாக சம்பந்தப்பட்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இம்முடிவுக்கிணங்க மேற்படி வங்கிகளின் எந்தவொரு கிளையிலும் எந்த வேலையும் நேற்று நடைபெறவில்லை. அனேகமாக இவ்வாரம் முழுவதும் இதேநிலை தொடரலாமென்று தெரிய வந்துள்ளது வங்கிகள் மூடப்பட்டுள்ளதால் பொதுமக்கள், வர்த்த —4ம் பக்கம் பார்க்க

## 50 பூஸா இளைஞர் சனியன்று யாழ். வருவர்

பூஸாவிலுள்ள தமிழ் இளைஞர்களில் மேலும் 50 பேர் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்படவுள்ளனர். இவர்கள் சனிக்கிழமை ரயில் மூலம் வவுனியாவுக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து பஸ் மூலம் யாழ்ப்பாணம் கொண்டு வரப்படுவர்.

## ராமநாதபுரத்தில் நேற்று முழுநாள் பகிஷ்கரிப்பு

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதற்கும், இந்திய மீனவர் இலங்கைக் கடற்படையால் சுடப்படுவதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் நடவடிக்கையாக நேற்று ராமநாதபுரத்தில் கடைகள், தியேட்டர்கள், ஹோட்டல்கள் —4ம் பக்கம் பார்க்க

# வடபகுதி ஓய்வூதியபணத்தை தாமதித்து வழங்க வேண்டாம்

(புலோலி)

''கடந்த ஆண்டு இறுதியில் ஒரு மாதங்கள் வடபகுதியின் நிகழ்வுகளால் ஓய்வூதிய வேலைகளில் தாமதம ஏற்பட்டது. ஆனல் இன்று காரணமின்றி ஓய்வூதிய உறுதிச் சீட்டுகள் தாமதித்து அனுப்பப்படுவதுடன், தாமதம் தவிர்க்க முடியாத விளைவு என்ற நிலை மாறி தாமதம் நிரந்தர நியதியாக்கப் பட்டுவிட்டது. இது அனுமதிக்க முடியாத அநியாயம்''

இவ்வாறு பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் யாழ் அரசாங்க அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்,

''மாதாமாதம் 15 ஆம் திகதிக்கு ஓய்வூதியம் கிடைக்கக் கூடியதாக ஓய்வூதிய உறுதிச் சீட்டுகள் அனுப்பப்படுவது நியதி. ஓய்வூதியக் கிளையின் அசமந்த போக்கினல் இந்த நிலை இன்று உருவாகியுள்ளது. அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு ஓய்வூதிய உறுதிச் சீட்டுகள் அனுப்ப ஆவன செய்து உதவுங்கள். அஞ்சலகங்கள் மூலம் பெற இன்னும் விரும்புபவர்களுக்கே குருநகர் வங்கி ஏற்பாடு. உள்ளூர் வங்கிகள் மூலமும், கிராமிய வங்கிகள் மூலமும் ஓவ்வூதியம் பெறுபவர்கள் இதனல் பாதிப்படையாமல் காப்பாற்றுங்கள்'' என்றும் அவர் கேட்டுள்ளார்,

## விவசாயிகள் பாதிப்பு

(சரசாலை)

கைதடி சமநல சேவை நிலையத்திற்குச் சொந்தமான உழவு இயந்திரம் இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியல் ஆயுத முனையில் கடத்தப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து விவசாயிகள் பெரிதும் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது

# பனைவெல்ல உற்பத்தி வேலை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது

(சுண்டுக்குளி)

இயங்காதிருக்கும பனைவெல்லத் தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பனை வெல்லத் தொழிற்சாலைகளை இயங்கச் செய்து மீண்டும் பனை வெல்ல உற்பத்தியை ஆரம்பிக்குமாறு இலங்கைப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே நடராசா தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பனம் வெல்ல உற்பத்தியை ஊக்குவிக்கவும், உற்பத்தியாகும் பனை வெல்லத்தைக்கொள்வனவு செய்யவும் பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை மேற் கொண்டுள்ளது பனம் வெல்லம் உற்பத்தி செய்ய முடியாத பட்சத்தில் பனம் பாணியாக உற்பத்தி செய்து சபைக்கு வழங்குமாறும், பனம் பாணியை ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தென்றும் சபைத்தலைவர் தெரிவித்துள்ளார்.




❋ யாழ். கன்னாதிட்டி வீதி பாஸ்கரன் கல்யாணி தம்பதிகளின் மகள் மலர்விழி தனது முதலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிருர்.

❋ கச்சேரி கிழக்கு புகையிரத நிலைய வீதியைச்சேர்ந்த கருணநிதி, மேகலா தம்பதிகளின் மகள் கார்த்திகா (பெபி) இன்று தனது ஐந்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிருர்.

❋ இராமநாதபுரம் கோபால கிருஷ்ண சர்மா போதநாயகி தம்பதிகளின் மகள் ஷோபனு இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ வரணி குமாரசாமி லோகேஸ்வரி தம்பதிகளின் மகன் மதன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ தாவடி வடக்கு ஸ்ரீதரன் கிருஷ்ணவேணி தம்பதிகளின் மகள் ஸ்ரீலாவண்யா இன்று தனது மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ சுன்னுகம் முரளிதரன் சுமித்திராதேவி தம்பதிகளின் மகள் கஸ்தூரி இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ ஆனைக்கோட்டை முகுந்தன் தவராணி தம்பதிகளின் மகன் ஜெகன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

❋ பாப்பாமோட்டை பெரிய சேவகம் சிவப்பேரகம் தம்பதிகளின் மகன் நல்லமூர்த்தி இன்று தனது மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்

❋ சுண்டுக்குளி, கொழும்புத் துறை வீதியைச் சேர்ந்த குலசேகரத்தின் புத்திரன் அனுசீலன் தனது நான்காவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிருர்.

❋ புங்குடுதீவு 1ஆம் வட்டாரம் ராஜா குயின் தம்பதிகளின் புதல்வன் தினேஸ் இன்றுதனதுமுதலாவதுபிறந்த நாளைக் கொண்டாடுகிருர்,

❋ ஏழாலைமேற்கு அருட்சிவம் ஜெயகுமாரி தம்பதிகளின் மகன் ஜெசிந்தன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ கோண்டாவில் சத்திய மூர்த்தி கலைகேஸ்வரி தம்பதிகளின் மகள் சத்தியவாணி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ திரியாய், மோகனதாஸ் நயனேஸ்வரி தம்பதிகளின் மகள் ஷாமிளா இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ பாஷையூர் புதுக்குடியிருப்பு அல்பேட் மவதி தம்பதிகளின் மகள் கனிஸ்ரலா இன்று தனது பதினேராவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ சந்தன மாதா கோவில் வீதி இந்திரகுமார் தவஜோதி தம்பதிகளின் மகன் சதீஸ் குமார் இன்று தனது மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ இணுவில், காரைக்கால் ரேட் சண்முகநாதன்- இராசரஞ்சினி தம்பதிகளின் மகன் சதீஸ்கரன் இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர்.

❋ மானிப்பாய் வடகிழக்கு 'தங்கமனை' இல்லத்தைச் சேர்ந்த தியாகராஜா தங்கராணி தம்பதிகளின் புதல்வன் ஸ்ரீ ஹரராஜா தனது பதின்மூன்ருவதுபிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிருர்,

## சென். ஜோன்ஸ் அதிபர் உரை:

# மாணவர் கல்வி கற்கும்போதே சேவை மனப்பான்மையையும் வளர்க்க வேண்டும்

(நல்லூர்)

''ஆதிமனிதனுக்கு பிரச்சினைகள் மிகக் குறைவாக இருந்தது. அவர்கள் வாழ்ந்தால் மட்டும் போதும் என்ற மன நிறைவோடு வாழ்ந்தனர். ஆனல் தற்கால மனிதன் தன்னைப் பற்றியும், தனது எதிர்காலத்தை குறித்தும் அங்கலாய்க்கிறவனுக வாழ்வதினல் அவன் பிறரைப் பற்றி எண்ணுவதில்லை. எமது சமுதாயத்தில் அதிக கவலை நிலவுகின்றது இதற்குக் காரணம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தமது வாழ்வைப் பற்றியே எந்நேரமும் அக்கறையாக இருக்கிருர்களே தவிர பிறரைப்பற்றியும், பிறரின் நல்வாழ்வு குறித்தும் எண்ணுவதில்லை''.

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராஜன் கல்லூரியின் பீற்ரூே ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற கல்லூரியின் லியோ கழக புதிய அங்கத்தவர்களின் பதவியேற்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரியின் மாணவ முதல்வரும் லியோ கழகத் தலைவருமான லியோ செல்வநாயகம் - நிர்த்தனன் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் கழகக் காப்பாளரும், கல்லூரி அதிபருமான திரு. சி ஈ. ஆனந்தராஜன் சிறப்புரையாற்றினர்.

நமது நாட்டில் வாழும் மக்களில் அநேகர் நோய், வறுமை, கஷ்டம் என்பவற்ருல் பாதிக்கப்பட்டவர்களாக வாழ்கிருர்கள். இவர்களின் நல்வாழ்வுக்காக நாம் கரிசனை காட்டி அவர்களுக்கு உதவுவதன் மூலமே உண்மையான திருப்தியும், சந்தோஷமும் அடைய முடியும். கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்குச் சேவை மனப்பான்மையை வளர்ப்பதற்காகவே சாரணர் பிரிவு, கடற் சாரணர் பிரிவு இன்ரறக் கழகம், லியோ சழகம், றெட் குறஸ் பிரிவு, சென்ற் ஜோன்ஸ் அம்புலன் பிரிவு ஆகிய கழகங்களை அமைத்து அவைகளில் மாணவர் அங்கம் வகித்து சேவை செய்ய சந்தர்ப்பம் வழங்கி வருகிறேம்.

இவைகளில் இணைந்து செயல்படும் மாணவர்கள் சமுதாயத்திலே சிறந்த பணியாற்றும் பழக்கத்தை இளமையிலே கற்றுக் கொள்ளுகிருர்கள். இந்த இயக்கங்களில் தம்மை இணைத்துப் பயிற்சி பெறும் மாணவர்கள் தமது இல்லத்திற்கும், தாம் கற்ற கல்லூரிக்கும், தமது சமுதாயத்திற்கும், தனது நாட்டிற்கும், உலகத்திற்கும் சேவை செய்து மனத் திருப்தியும் சந்தோஷமும் அடைய வேண்டுமென்று ஆசி கூறுகின்றேன் என்று அவர் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண லயன்ஸ் கழகத் தலைவர் லயன்ஸ் எஸ். அற்புதானந்தன் புதிய அங்கத்தவர்களுக்கு அறிவுரை வழங்கினர்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி லியோ கழகப் பிரதிநிதி செல்வி குமாரதாஸ் தமது கழகத்தின் சார்பில் வாழ்த்துக் கூறினர். கழகச் செயலாளர் லியோ சி ஜெயசங்கர் நன்றி கூறினர்.

## பதவி வெற்றிடம்

### செய்தி ஆசிரியர் (NEWS EDITOR)

ஈழமுரசு பத்திரிகையின் செய்தி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகளில் போதிய அறிவும், தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நல்ல தேர்ச்சியும, மொழி பெயர்க்கும் ஆற்றலும், பத்திரிகை அலுவலகமொன்றின் செய்திப் பிரிவில் ஆகக்குறைந்தது ஐந்து வருடத்துக்குக் குறையாத தொழில் அனுபவமும் பெற்றவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்,

கல்விச் சான்றிதழ் பிறப்புச் சான்றிதழ், தொழில் அனுபவச்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளையும் விண்ணப்பத்துடன் இணைத்து, எதிர்பார்க்கும் மாதச் சம்பளத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

முற்றிலும் திறமை, தகுதி ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே நியமனம் வழங்கப்படும். எவர் மூலமாவது தனிப்பட்ட சிபார்சு செய்வித்து இப்பதவியைப் பெற முயற்சி எடுத்தால் சம்பந்தப்பட்டவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்

விண்ணப்பங்கள் நேரில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் ''செய்தி ஆசிரியர் பதவி'' எனக்குறிப்பிட்டு, பதிவுத்தபாலில் மட்டும் விண்ணப்பங்களை அனுப்பவும்.

சகல விண்ணப்பங்களும் மிகவும் அந்தரங்கமாக வைத்திருக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 15-3-1985. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
ஈழமுரசு,
37, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

## வண. பிதாவின் நினைவாக கிணறு

(சுண்டுக்குளி)

வங்காலையில கொலையுண்ட வண பிதா. மேரி பஸ்தியன் அடிகளாரின் ஞாபகார்த்தமாகப் பலாலி தெற்கு, வயாவிளான் புனித யாகப்பர் தேவாலயத்தில் கிணறு ஒன்று நன்கொடையாக வெட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. பற்றிக் பெர்ணண்டஸ் தம்பதிகளினல் அமைத்துக் கொடுக்கப்பட்ட இக் கிணறு பங்குக் குரு வண. பிதா எம். ரி. பற்றிக அடிகளாரினல் திருப்பலிப் பூசை நிறைவேற்றப்பட்டுப் பொது பாவனைக்காக ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

கலர் பிலிம் ... PROCESSING PRINTING ... கொழும்பு ஸ்ரூடியோ

# பிரச்சினைகளைக் கண்டறிய சமாதான இணக்க சபை

(உடுப்பிட்டி)

கரவெட்டி பிரஜைகள் குழுவின் பெரும் முயற்சிகளையடுத்து கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாழ் மக்களின் குடியியல் பிரச்சினைகளை விசாரித்து நல்ல தீர்ப்பு வழங்கி சமூகத்தில சட்டத்தையும் ஒழுங்கையும்நிலைநிறுத்தும் வகையில் ''கரவெட்டி பொது சமாதான இணக்க சபை' அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

இதன் தலைவராக திரு எம். சின்னையாவும், செயலாளராக திரு எம் வேலுப்பிள்ளை ஆசிரியரும் பொருளாளராக திரு. வீ சின்னத்தம்பியும் மற்றும் 14 பேரும் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் வதிரி திரு இருதயக் கல்லூரியில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

## தேவை

கணக்கியல் அறிவும், ஆங்கிலத் தட்டச்சு அனுபவமும் உள்ள பெண் இலிகிதர்கள் தேவை. வேலைஅனுபவம்உடையோர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பிக்கவும்; தமிழர் நிதியம் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## சேவாச்சிரம அரும்பணிகள்

(புலோலி)

ஸ்ரீ இராமகிருஷ்ணரின் ஜயந்தியையொட்டி பருத்தித் துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமத்துல் ஆதரவற்றவர்ளுக்கான மருத்துவ சேவை ஒன்று பருத்தித் துறை லயன்ஸ் கழகத்தால் மேற் கொள்ளப்பட்டது.

எதிர்வரும் 6ம் திகதி ஆச்சிரமத்தில் ஏழைகளுக்குச் சமைத்த உணவும் பாதிக்கப்பட்டவர்களுக்கென உப உணவுப் பொருட்களும்வழங்கப் படவுள்ளன.

## மரண அறிவித்தல்

### கதிரேசு ஆறுமுகம் (ஆசிரியர்)

கச்சாய், கொடிகாமம் கதிரேசு ஆறுமுகம் (ஆசிரியர், குஞ்சுப்பரந்தன் அரசினர் பாடசாலை) அவர்கள் காலமானுர். அன்னர் அன்னப்பிள்ளை (ஆசிரியை) யின் அன்புக் கணவரும், குணசீலன் (யாழ்-வளாகம்), குணேந்தினி (யாழ்-இந்து மகளிர் கல்லூரி), குணரஞ்சினி ஆகியோரின் தந்தையுமாவார். ஈமக் கிரியைகள் இன்று (27-02-1985) புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு நடைபெற்று கச்சாய் தெற்கு குடும்ப மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

''உதயகிரி''
கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

ஆ. அன்னப்பிள்ளை (மனைவி)
சி அருளம்பலம் (மைத்துனர்)
சி நடராசா (மைத்துனர்)

ஈழமுரசு



உதய சிந்தனை
கண்டாலும், கேட்டாலும் தொட்டாலும், முகர்ந்தாலும், உண்டாலும், சென்றாலும், தூங்கினாலும், மூச்சு விட்டாலும் மெய்யறிவுடைய யோகி ஒன்றையும் தான் செய்யவில்லை என்று எண்ண வேண்டும்.
—பகவத் கீதை

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

27-2-85 புதன்கிழமை (இரத்தாக்ஷி மாசி 16)

# வடிகஞ்சிக்கு உப்பா? பாலுக்குச் சர்க்கரையா?

உலகத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.

அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தி அடையாத நாடுகள், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என்று இவை வகுக்கப்பட்டுள்ளன.

செல்வச் செழிப்பால், செருக்குடன் இருக்கும் மேற்கு நாடுகளிடம் என்றுமே கையேந்தி நிற்கும் நிலை, மற்றைய இரு பிரிவு நாடுகளினதும் தலையெழுத்து.

இலங்கை போன்ற சில நாடுகளை அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றும் மண்டல நாடுகளின் கூட்டுக்குள் திணித்தாலும், அது எவ்வளவுக்குப் பொருத்தமானது என்பது இன்றும் கேள்விக்குறியாகவே தென்படுகிறது.

எங்களின் 'கல்லாப்பெட்டி' மந்திரி றொனி, அடிக்கடி பிச்சாபாத்திரம் ஏந்திக் கொண்டு வானத்தில் பறந்து செல்லும் செய்திகளும், சர்வதேச நிறுவனங்களிடம் மண்டியிட்டுப் பெற்று வரும் உதவிகள் பற்றிய தகவல்களும் இலங்கை எங்கு நிற்கிறது என்பதை விளக்கப் போதும்.

'பற்றுக்குறை' இலங்கையுடன் ஒட்டிவிட்ட சாபக்கேடு.

ஆனால், 'மிதமிஞ்சிய' என்னும் நிலை சில மேற்கு நாடுகளை இப்போது வாட்டி வதைக்கின்றது. அவர்களது தேவையிலும் பார்க்கக் கூடுதலான உற்பத்தி, அந்த நாடுகளுக்குத் தலையிடியைக் கொடுக்க ஆரம்பித்துள்ளது.

மேற்கு ஜேர்மனியில் பசுமாடுகளும், பழ மரங்களும் அதிகரித்து விட்டதால், அந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட என்ன செய்யலாம் என்ற வழி தெரியாமல் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருந்த அந்நாட்டு அதிகாரிகள், இப்போது தீர்வைக் கண்டு பிடித்துவிட்டனர்.

மகாபுத்திசாலிகளான மேற்கு ஜேர்மன் அரசியல், பொருளாதார நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கும் அந்தத் தீர்வு என்ன தெரியுமா?

அளவுக்கு அதிகமாக மேற்கு ஜேர்மனியிலிருக்கும் இரண்டு லட்சத்து அறுபதாயிரம பால் தரும பசு மாடுகளை அழித்து விடப் போகிறார்கள்.

பல லட்சக்கணக்கான பழ மரங்களை தறித்து விடப் போகிறார்கள்.

இப்போதைக்கு இதனைச் செய்வதைத் தவிர வேறு மார்க்கம் இல்லையாம்,

மனித உடலுக்கு அத்தியாவசியமான உயிர்ச்சத்துக்களை வழங்கும் பல லட்சக்கணக்கான பசுக்களையும், பழ மரங்களையும் அழித்தொழிக்கும் அத்தியாவசிய நிலை அந்த நாட்டுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

பசுப்பாலையும், பழ வகைகளையும் வாழ்க்கையில் கண்டும், கேட்டுமிராத பல கோடி மக்கள் அரை உயிரும், குறை உயிருமாக வாழ்வா சாவா என்று போராடிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் மேற்கு ஜேர்மனி இப்படியான ஒருமுடிவுக்கு வந்திருப்பது நியாயமாகுமா?

எதியோப்பிய மக்களின் பட்டினிச் சாவை மேற்கு ஜேர்மனி அறியவில்லையா?

இலங்கையில் வாழ வழியின்றி இந்தியா செல்லும் தமிழ் அகதிகள் விஷயம் இவர்களுக்குத் தெரியாதா?

மேற்கு ஜேர்மனி பசுக்கொலை, பழமர வதைச் செய்தியைக் கேட்கும்போது அர்த்தமுள்ள பழமொழியொன்றே நினைவுக்கு வருகின்றது.

''கஞ்சிக்கு உப்பில்லை என்று ஒருவன் அழுது கொண்டிருக்க, பாலுக்குச் சர்க்கரை இல்லையே'' என்று மற்றொருவன் கதறிக் கொண்டிருந்தானாம்.

கொல்லப்படவிருக்கும் பசுக்களில் ஒருபகுதிக்கு உயிர்ப்பிச்சை வழங்க தமிழ்நாடு தாமாகவே முன்வந்துள்ளது, இதற்கு மேற்கு ஜேர்மனி செவிசாய்க்குமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

பழ மரங்களை அழிக்கும் விஷயத்தில் மற்றவர்கள் அதிகம் அக்கறை கொள்ள மாட்டார்கள்.

ஆனால், பல குடும்பங்களை வாழ வைக்கும், பல உயிர்களை ஊசாட வைக்கும் பாலைத்தரும் பசு மாடுகளைக் கொல்வதற்கு எடுத்திருக்கும் முடிவை ஜேர்மனி அவசரப்பட்டு அமுல் செய்யக் கூடாது.

'உயிர்ப்பலி கூடாது' என்பதற்காக மட்டும் இதனை நாம் கூறவில்லை.

பல உயிர்களை இதனால் வாழ வைக்க முடியுமென்பதாலேயே, ஜேர்மனி அவசரப்படக் கூடாது என்று நாம் வேண்டுதல் விடுகின்றோம்.

# பாகிஸ்தானில் ஏழு பேர் படுகொலை
# ஷியாவின் மந்திரி மூவர் தோற்ற நிலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் எட்டாண்டுகளுக்குப் பின்னர் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது வாக்குகள் எண்ணப்படுகையில் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல்-ஹக்கின் மிக முக்கிய மந்திரிகள் மூவர் தோல்வியடைந்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது. பாகிஸ்தானில் இராணுவத்துறைக்கும் பொறுப்பான அமைச்சர் தல்பூர் சிந்து மாகாணத்தில் தோல்வி கண்டார் என்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நியாஸ் இதுவரை பிரபல்யம் பெற்றிராத வழக்கறிஞர் ஒருவரிடம் தோற்றுப்போனார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டதுகலாச்சார அமைச்சரும் தோல்வி கண்டோர் பட்டியலில் இடம் பெறுவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. அமைச்சரவையைக் கலைத்த போதிலும் ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சர் உட்பட எண்மர் அடங்கிய செயற்பாட்டுக் குழுவை செயற்படுமாறு பணித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. தேர்தலில் சில இடங்களில் மிக குறைந்த எண்ணிக்கையிலும் சில இடங்களில் மிகக் கூடிய எண்ணிக்கையிலும் வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளனவாம் தேர்தல் முடிவுகள பற்றி பூரண அட்டவணை துரித கதியில் தயாரிக்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானின் தேசிய சட்ட சபைக்கான தேர்தலில் எண்பதாயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. குறைந்த அளவு வாக்காளர்களே வாக்களிப்பில் கலந்து கொண்டதாகவும் தெரியவருகிறது.

எதிர்க் கட்சிகள் தேர்தலில் கலந்து கொள்ளத் தடை விதிக்கப்பட்டமையால் எத்தனை பேர் வாக்களிப்பில் கலந்து கொண்டனர் என்ற தெளிவான விபரங்கள் தெரியவில்லையென அறிக்கைகள் கூறுகின்றன.

தேர்தல் வன்முறையில் எழுவர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தகவல் ஒன்று தெரிவித்தது.

## லஷ்மி டில்லியில் சாகித்தியப் பரிசு பெற்றார்

(புதுடில்லி)

தமிழகத்தின் பண்பட்ட மிகச்சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான லஷ்மி (டாக்டர் திரிபுரசுந்தரி) கடந்த வருடத்துக்கான சாகித்திய மண்டலப் பரிசினை புதுடில்லியில் நடைபெற்ற விழா ஒன்றில் வைத்துப் பெற்றுக் கொண்டார்.

''ஒருகாவிரியைப் போல'' என்ற இவரது நூலுக்கு தாமரைப் பத்திரச் சான்றிதழும் பத்தாயிரம் ரூபா ரொக்கமும் கிடைத்துள்ளன.

### தென் லெபனான் ஐ. நா. வில் புகார்
## இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு: அவசரக் கூட்டம் அவசியம்

(சியோல்)

இஸ்ரேலியப் படைகள் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன என்று தென் லெபனான் ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபையிடம் புகார் செய்துள்ளது.

இது பற்றி விசாரணை நடத்த அவசரக் கூட்டம் ஒன்றினைக் கூட்டுமாறும் தென் லெபனான் தற்போதைய ஐ. நா. பந்தோபஸ்து சபைத்-தலைவரான திரு. என். கிருஷ்ணனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## மொஸாம்பிக் வெள்ளம் இலட்சம் மக்கள் பாதிப்பு

(மொபுட்டு)

மொஸாம்பிக்கில் உண்டான கோர வெள்ளப்பெருக்கால் ஒரு இலட்சத்து முப்பதாயிரம மக்கள் வரை வசிப்பிடங்களை இழந்து, உண்ண உணவின்றி அவதிப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. நிவாரணப் பணிகள் துரித கதியில் நடைபெறுகின்ற போதிலும் வெள்ளத்தின் சீற்றம் அடங்கியபாடாயில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. வெள்ள அனர்த்தம் பற்றிய தகவல்களை மொபுட்டு வானொலி அறிவித்து வருகிறது.

மொஸாம்பிக்கின் தென் பகுதியில் உண்டான வெள்ளம் மிகப்பெரும் விபரீதங்களை விளைவித்து எண்மரின் ஜீவனைப் பறித்துள்ளது.

ஐந்து இலட்சம் டாலர் வரை வீதிச் சேதத்துக்கும், பத்து இலட்சம் டாலர்வரை ரயில் போக்குவரத்துச் சேதத்துக்கும் மதிப்பிடப்படுகிறது,

நதிகள் பெருக்கெடுத்துப் பாய்ந்ததால் முப்பத்தையாயிரம் ஏக்கர் பயிர்க்காணிகள் நாசமாகிவிட்டனவாம்.

### ரஷ்ய வெளியுறவு மந்திரியின்
## இத்தாலிய விஜயம் ஆரம்பம் பாப்பரசர் சந்திப்பு ஐயம்?

(மாஸ்கோ)

சோவியத் யூனியன் வெளியுறவு அமைச்சர் திரு. குரொமிக்கோ இத்தாலி விஜயம் மேற்கொண்டு ரோம் சென்றுள்ளார்.

இவர் பாப்பரசர் அருளப்பர் சின்னப்பரைச் சந்திப்பாரா என்பது குறித்து எதுவும் உறுதியாகத் தெரிவிக்கப்படவில்லை.

தற்போதைய காலகட்டத்தில் சோவியத் யூனியன் வெளியுறவு அமைச்சரின் இத்தாலிய விஜயம் முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. குரொமிக்கோ ஸ்பெயினுக்கும் விஜயம் செய்வாரென்றும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

### எதியோப்பியாவின் முறையீடு
## இஸ்ரேல் யூதரை விமானம் மூலம் கடத்திச் செல்கிறது

(அடிஸ்அபாவா)

சூடானுடன் சதிசெய்து எதியோப்பியாவில் இருந்து யூதர்களை இஸ்ரேலியரால் இரகசியமாக விமானங்கள் மூலம் கடத்திச் செல்லப்படுவதாக எதியோப்பியா ஐக்கிய நாடுகள் சபையிடம் முறையீடு செய்துள்ளது,

இவர்களை விடுவிக்குமாறு ஐ.நா. சபைப் பொதுச் செயலாளர் திரு. குவெல்லர், அணிசேரா நாடுகள் இயக்கத் தலைவர் திரு. ராஜீவ் காந்தி ஆகியோரிடம் எதியோப்பியா கோரிக்கை விடுத்துள்ளது.

### நியுஸிலாந்து பிரதமர் சூளுரை
## அமெரிக்க கெடுபிடியால் கொள்கையில் தளரோம்

(லண்டன்)

''அமெரிக்காவின் கெடுபிடிகளுக்கு விட்டுக்கொடுத்து நியுஸிலாந்து தனது கொள்கையை மாற்றிக் கொள்ளப் போவதில்லை'' என்று நியுஸிலாந்து பிரதம மந்திரி திரு. டேவிட் லாங்கே தனது அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கான விஜய ஆரம்பத்தில் கூறினார்.

நியுஸிலாந்து துறைமுகத்தில் அணு ஆயுதங்கள் கொண்ட யுத்தக் கப்பல்களை தரித்துச் செல்ல அனுமதிப்பதில்லை என்ற தனது நாட்டு தீர்மானம் கண்டனத்துக்குள்ளாகியிருப்பதால் தமது நிலைப்பாட்டை நேரில் விளக்க அவர் இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

''நியுஸிலாந்து மக்கள் நேர்மை மிக்கவர்கள், பொறுப்புணர்ச்சியுடன் மேற்கொள்ளும் தீர்மானத்தை கைவிடமாட்டார்கள்'' என்றும் சொன்னார் திரு. லாங்கே.

அவர் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்கிரெட் தட்சரையும் சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. நியுஸிலாந்தின் இம்முடிவினால் அமெரிக்கா, பிரிட்டனுடனான நியுஸிலாந்தின் உறவு பாதிக்கப்படும்நிலை உருவாகியுள்ளது

## 10 ஆயிரம் அகதிகள்

(ராமேஸ்வரம்)

இலங்கையில் இராணுவ வன்முறை தாங்க முடியாது திங்கட்கிழமை 400 அகதிகள் தமிழகம் வந்ததாகவும் இம்மாதம் ஐந்தாம் திகதி முதல் இங்குவந்த அகதிகளின் எண்ணிக்கை பத்தாயிரம் என்றும் நேற்று சென்னை வானொலி அறிவித்தது.

27 . 2 . 1985 புதன்கிழமை

ஈழமுரசு

## தேங்காய் எண்ணெய் 'பரலில்' பயணம் செய்த கசிப்பு பிடிபட்டது!

(அரியாலை)

கோண்டாவிலில் இருந்து அரியாலை நாவலடிக்கு விற்பனை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட "கசிப்பு" அரியாலை மேற்குக் கிராமசேவையாளர் திரு மு. பயில்வாகனத்தினால் பிடிக்கப்பட்டது அரியாலைச் சந்தியில் இச்சம்பவம் நடைபெற்றது. 'பரலில்' தேங்காய் எண்ணெய் இருப்பதாகக் கூறிய இந்நபரில் சந்தேகங் கொண்டு பரலைப் பார்த்த போதே கசிப்பு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது பிடிக்கப்பட்ட கசிப்பு அவ்விடத்திலேயே ஊற்றப்பட்டதுடன், கொண்டு வந்த நபருக்குக் கிராம சேவையாளர் புத்திமதி கூறி அனுப்பி வைத்தார். சம்பந்தப்பட்டவர் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

### இன்று பதவி ஏற்கவுள்ளார்:

# தமிழக புதிய சபாநாயகர் பாண்டியன்;

## சட்டசபை உறுப்பினராக எம்.ஜி.ஆர்.பதவிப்பிரமாணம்

(சென்னை)

தமிழ்நாடு சட்ட சபையின் புதிய சபாநாயகராக திரு பாண்டியனும், துணை சபாநாயகராக திரு பாலசுப்பிரமணியமும் இன்று முறைப்படி பதவிப் பிரமாணம் செய்து கொள்வர்.

இப்பதவிகளுக்கான வேட்பு மனு தாக்கல் இறுதித் தினமான நேற்று வரை இவ்விருவரது மனுக்கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

திரு. பாண்டியன் அ தி மு க சார்பில் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்தும் திரு. பாலசுப்பிரமணியம் மதுரை மாவட்டத்தில் இருந்தும் சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தனர். திரு. பாண்டியன் முன்னைய சட்டப் பேரவையில் உப சபாநாயகராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமசந்திரன் நேற்று சட்டசபை உறுப்பினராகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். பதில் சபாநாயகர் திரு. ப. உ சண்முகம் அவருக்குச் சத்தியப் பிரமாணம் செய்து வைத்தார்

அவ்வேளை முதலமைச்சரின் சக அமைச்சர்கள் பலரும் சபையில் சமுகமளித்திருந்தனர்.

மதுரை மாவட்டம் ஆண்டிப் பட்டித் தொகுதியிலிருந்து முதலமைச்சர் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

### தமிழ் மாணவர்கள் விடுத்துள்ள வேண்டுகோள்:

## போராட்ட வயலில் விளையும் புல்லுருவிகளை முளையிலேயே களை எடுப்பது மிக அவசியம்

அரசியல் வறுமை கொண்ட ஸ்ரீலங்கா அரசாங்கத்தின வரலாறு காணாத கொடுங் கோலாட்சிக்குள் சிக்குண்டு தவிக்கும் அப்பாவித் தமிழன், உள் வீட்டுக்குள் சில பசுத் தோல் புலிகளால் பலியாவதை அனுமதிக்கிறீர்களா? எதிரியை அழிப்பதற்காக ஏந்தப்பட்ட துப்பாக்கி முனைகள் இன்று எம் மக்களை நோக்கி திசைதிருப்பப்படும் துர்ப்பாக்கிய நிலையை தொடர்ந்தும் அனுமதிக்கிறீர்களா? மற்றும் உளவாளிகளையே மனந்து பிடிக்கும் நீங்கள், உள்ளூர் களவாளிகளை ஒழிக்க முடியாதிருக்கிறீர்களா?

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் நேற்று யாழ். நகர் எங்கும் பரவலாக வநியோகிக்கப் பட்டன.

தமிழ் மாணவர்கள் என்ற பெயரில் "புனிதமான இயக்கங்களுக்கு பணிவான வேண்டுகோள்" என்ற தலைப்பில வெளியிடப்பட்ட இப்பிரசுரத்தில முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

எத்தனையோ ஏழைத் தொழிலாளரின் அரைவயிற்றுக்காவது கஞ்சி வார்க்கும் சில தனியார் நிறுவனங்களின் பணம் கொள்ளையடிக்கப்படுகின்றன. தன் வாழ்க்கைக்கென சேர்த்து வைக்கப்பட்ட சில தனிவீட்டுச் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன.

மலரப்போகும் சுதந்திர தாயகத்தின் நாளைய நிர்வாகம் ஒப்படைக்கப்படவிருக்கும் இன்றைய மாணவர்களின் கல்விக் கோவில்களின் உபகரணங்கள், பணம் போன்றவை கொள்ளையடிக்கப்படுகின்றன. அண்மையில் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் பணம் கொள்ளையடிக்கப்பட்டது இந்த ஈனச் செயல்கள் எம் கண்களை நாமே எமது விரல்களால் குத்திக் குருடாக்கும் செயலுக்கே ஒப்பாகும்.

"மனமுவந்து" கொடுக்கப்படாத தனியார் பணமும், பாடசாலை இரசாயனப் பொருட்களும் எந்த வகையிலும் போராட்டத்திற்கு சரியான பங்களிப்பைச் செய்யப்போவதில்லை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

சில தலைமையற்ற இளைஞர்களின் கட்டுப்பாடற்ற போக்கினை சுதந்திரத்தினை அனுபவிக்கவிருக்கும் எந்தவொரு தமிழனும் விரும்பமாட்டான். போராட்ட வயலில் விளையும் சில புல்லுருவிகளை முளையிலேயே களையெடுக்க வேண்டும் இல்லையேல் இவைகளே தமிழன் தலையெடுப்பதற்கு தடைகளாக அமைந்து விடும் என்பதே எங்கள் புனிதமானவர்களுக்கு நாம் விடுக்கும் பணிவான வேண்டுகோள் என்றும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாரத கடல் பாதுகாப்பு நான்கு மடங்கு அதிகரிக்கும்

(சென்னை)

பாரத கடலாதிக்க எல்லைப் பாதுகாப்புப் படை எதிர்வரும் பத்து வருடங்களுக்குள் மூன்று முதல் நான்கு மடங்குவரை விரிவுபடுத்தப்பட விருப்பதாக மேற்படி படையின் டைரக்டர் ஜெனரல் திரு எஸ். குரானு அறிவித்துள்ளார்.

இப்படையின் மிகப்பெரும் கப்பலான 'விக்ரம்' கப்பல் தளத்தில் அதிகாரிகள், மாலுமிகள் மத்தியில் பேசிய அவர், 'இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை தாக்கி வருவதால் பாரத ரோந்துப் பணி தீவிரமாகும் என்றும் அதிகாரிகளும், மாலுமிகளும் ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்றும் கூறினர்.

மேற்படி பாதுகாவல் படையிடம் தற்போது இருபது கப்பல்கள் இருக்கின்றன என்றும் திரு. குரானு மண்டபம், ராமேஸ்வரம் பகுதிகளுக்கு செல்லவுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டது.

### பாக்கு நீரிணையை பார்வையிட்டார்

இந்தியக் கடலோரக் காவற் படையின் தலைவர் வைஸ் அட்மிரல் ஐ. ஏ. எஸ். குரானு நேற்று மண்டபம், இராமநாதபுரம், பாக்கு நீரிணைப் பகுதிகளைப் பார்வையிட்டார். கடற்படை விமானமொன்றில் அமர்ந்து அவர் ஒரு மணி நேரம் இதனை மேற்கொண்டார்.

பின்னர் மதுரை திரும்பிய அவர் அங்கு உயர் பொலிஸ் அதிகாரிகள், இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தினர். பின்னர் மண்டபம் காவற்படைத் தளத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். இவருடன் காவற்படை நடவடிக்கைக்கான தலைவர் கமாண்டர் ரமேஷ், கிழக்கத்திய கமாண்டிங் தலைவர் கமாண்டர் ஜெயராமன், மண்டபத் தளத் தலைவர் கமாண்டர் சந்திரசேகர் ஆகியோர் உடன் சென்றனர்.

### பவுஸர் கடத்தப்பட்டது

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் ட்ரேட் நிறுவனம் ஒன்றிலிருந்து சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான பவுஸர் ஒன்று நேற்று முன்தினம் இரவு கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. சைக்கிள்களில் வந்தவர்களே இக்கடத்தலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### பரீட்சையை ..

—1ம் பக்கத் தொடர்

சகல பாடசாலைகளிலும் பரீட்சையைத் திட்டமிட்டபடி நடத்த பெற்றோர், பழைய மாணவர், இளைஞர் அமைப்புகள். பிரஜைகள் குழுக்கள், தொண்டர் அமைப்புகள் ஆகியன கூட்டாகவும், தனித் தனியாகவும் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவுள்ளன.

யாழ் மாவட்டத்துக்கான வினாப்பத்திரங்கள் போதிய பாதுகாப்புடன் விமானம் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன. கல்விப் பணிப்பாளர் எம். சிமிபாம்பிள்ளை தலைமையில கல்வி அதிகாரிகள்குழு பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இதேவேளை இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவா விடுத்துள்ள வேண்டுகோளில் பரீட்சை ஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெற அனைவரையும் ஒத்துழைக்குமாறு கேட்டுள்ளார்.

### நேற்று ,,

— 1ம் பக்கத் தொடர்

அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

இராமநாதபுரம் வர்த்தக சபையால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க இது நடைபெற்றது. சபைத் தலைவர் கணேஷ் தலைமையில் கண்டன ஊர்வலமும நடந்தது. பிரச்சினையில் உடனடியாகத் தலையிடுமாறு மத்திய அரசைக் கோரும் மனுவொன்று மாவட்ட உதவிக் கலெக்டரிடம் கையளிக்கப்பட்டது மண்டபம் முகாமிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கென 4,000 உணவுப்பொட்டலங்கள் வர்த்தக சபையால் வழங்கப்பட்டன.

### அடுத்த மாதம் நீக்கப்படும

கடந்த நவம்பர் மாதம் முதல் வடபகுதி கடலில மீன்பிடிக்க விதித்த தடையுத்தரவு அடுத்த மாதம முதல் நீக்கப்படவுள்ளதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

### பஸ் நிலையத்தில்..

—1ம பக்கத தொடர்

களின் போக்குவரத்து வசதிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவே கூடியளவு டிப்போ பஸ் நிலையத்தில சேமித்து வைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. பன்னிரண்டு பஸ்கள் பரீட்சை வினா, விடைத்தாள்களை ஏற்றி இறக்க ஒதுக்கப் பட்டுள்ளன.

### மன்னார்...

—1ம் பக்கத் தொடர்

கள் மூலம தெரியவந்துள்ளதாம். அதே வேளையில், இம் மாதம் 4ம் திகதி முதல நேற்று வரை சுமார் பத்தாயிரம் தமிழ் அகதிகள் இலங்கையின வடபகுதியிலிருந்து வந்துள்ளதாக ராமேஸ்வரம மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. குருமூர்த்தி நேற்று அறிவித்தார்

### யாழ். பத்திரி...

—1ஆம் பக்கத் தொடர்

தொடர்பாக உதவி ஆசிரியர் நீண்ட நேரம் விசாரணை செய்யப்பட்டாராம். காமினி நவரத்தின முன்னரும் ஒரு தடவை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டவரென்பது குறிப்பிடத்தக்கது

### கொழும்பு...

—1-ஆம் பக்கத் தொடர்

தமிழ் அகதிகள் கடல்மார்க்கமாக இந்தியா செல்வது தொடர்பாகவும் சில தகவல்கள் இச்செய்தியில் தெரிவிக்கப்படுமெனவும் தெரிகின்றது.

### உத்தரவை.,

1- ஆம பக்கத் தொடர்

நான்கு தீவிரவாத இளைஞர்கள மரணமாக நேர்ந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இச்சம்பவத்தையடுத்து நேற்று முழுவதும் மாவிட்டபுரம் பகுதியில பெரும் பதற்றம நிலவியது சம்பந்தப்பட்ட 'வாகனம்' இன்னமும் பாதுகாப்பில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது

### நகை வியாபாரி விசாரணைக்கு

யாழ். நகரின் பிரபல நகை வியாபாரிகளில் ஒருவர் விசாரணைக்காக காரில் வந்த சில இளைஞர்களால் நேற்றுக் காலை அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. நேற்று மாலையே விடுதலை செய்யப்பட்டு விடுவார் என்று கூறப்பட்டே இவர் கூட்டிச் செல்லப்பட்டாராம்.

### கூட்டுத்தாபன கொள்ளை

யாழ். வெலிங்டன் தியேட்டர் சந்திக்கு அருகேயுள்ள கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையத்திலிருந்து இருப்பு புத்தகடுகள் உட்பட மற்றும் பல பொருட்கள் நேற்று முன்தினம் மாலை கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

லொறி ஒன்றில், துப்பாக்கிகள், கைக்குண்டுகள சகிதம் வந்த கோஷ்டி ஒன்றே இக் கொள்ளையை நடத்தியதாகத் தெரியவந்துள்ளது.

### லொறியல் ஏறி ஜீப சென்றது

யாழ். நகரில உள்ள தனியார் எஞ்ஜினியரிங் நிறுவனத்துக்கு நேற்று முன்தினம் மாலை லொறி ஒன்றில் சென்ற சுமார் இருபது இளைஞர்கள் துப்பாக்கிகளைக் காட்டி அங்கிருந்தோரை மிரட்டி விட்டு மேற்படி நிறுவனத்தில் திருத்துவதற்கென நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜீப்பொன்றை லொறியில ஏற்றிச் சென்றுள்ளார்கள். பிரஸ்தாப ஜீப் விவசாயக் கூட்டுறவுச் சபைக்குச் சொந்தமானதெனவும் சில மாதங்களுக்கு முன் திருத்துவதற்காகக் கொண்டு வந்து விடப்பட்டிருந்ததாகவும் தெரிய வருகிறது.

### பாகிஸ்தானில்

### 5 மந்திரிகள் படுதோல்வி

பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத் தேர்தலில இதுவரை 210 இடங்களிலிருந்து முடிவுகள் வெளியாகியுள்ளன, தேர்தலைப் பகிஷ்கரிக்குமபடி சில எதிர்க்கட்சியினர் விடுத்த வேண்டுகோளை செவிசாய்க்காது 55 வீதத்தினர் வாக்களித்ததாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன- ஜனாதிபதி ஷியாவின் கட்சிக்கு பெரியோக வெற்றி கிடைத்துள்ளது- அவரது அமைச்சர்கள் ஒன்பது பேர் போட்டியிட்டு நாலவர் மட்டுமே வெற்றிபெற்றனர் அவர்களில இருவர் போட்டியின்றி தெரிவாகியுள்ளனர். ஐவர் தோல்வியடைந்துள்ளனர். ஜனாதிபதி ஷியா தமது அமைச்சரவையை நேற்றுக் கலைத்துவிட்டார், சிறு அசம்பாவிதங்கள் நடைபெற்றாலும் இத் தேர்தல் அமைதியாகவும், சுதந்திரமாகவும நடைபெற்றது.

### யாழ். குடா...

—1ம் பக்கத்தொடர்

கர்கள் பெரும் நெருக்கடிக்காளாகியுள்ளதையும் காணக் கூடியதாகவுள்ளது.

அதேவேளையில், நாளை 28ம் திகதி குருநகரில் வழங்கப்படவிருந்த வட்டுக்கோட்டை, சங்கானை, ஊரெழு, கொக்குவில் பகுதிகளுக்கான பென்ஷன் வழங்கல்களும் மறு அறிவித்தல்வரை பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 27-02-1985 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336